1981 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, பதிவேடுகளைப் புதுப்பிப்பதற்கும் கிராம அதிகாரிகளுக்கும் சம்பந்தமே இல்லை. கிராம அதிகாரிகள் கணக்குகளைத்தான் எழுதுகிறார்கள். ஆகவே பதிவேடுகளைப் புதுப்பிக்கின்ற பணியைப் பொறுத்தமட்டில் தனியாக டிப்பார்ட்மென்ட் இருக்கின்றது. சர்வே டப்பார்ட்மென்ட் போன்றவைகள் இந்தப் பணியைச் செய்து வருகின்றன.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, பதிவேடுகளைத் திருத்தும் திட்டம் அமலில் இருக்கின்ற மாவட்டங்களில் அந்தந்தப் பதிவேடுகளுடன் நிலங்களைப் பற்றிய வரைபடங்களின் நகல் ஒன்றும் இருக்க வேண்டும் என்ற வகையில் அரசு அந்த முறையைக் கொண்டுவர முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டத்தின் கீழ் பதிவு செய்கின்ற போது அந்தந்தக் கிராமங்களிலே எவ்வளவு பட்டாக்கள் இருந்தாலும் அந்தப் பட்டாக்களை எல்லாம் தனித்தனியாக அளந்து அதற்கு வரைபடம் போட்டு அந்தப் பட்டாக்களின் சொந்தக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. தற்சமயம் அங்கே என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றதோ அந்த மாற்றத்திற்கேற்ப அதாவது புதிதாக பள்ளிக்கூடமோ, மருத்துவமனையோ வந்தது என்றால் அந்த கிராமத்தினுடைய வரைபடத்திலே அவைகள் எல்லாம் குறிக்கப்படும் எப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU T. VENKATA REDDY: Sir, In Hosur and Denkanikota, ryots are cultivating mulberry on poromboke lands. They have been promised that they would be given pattas after the non-assignment order has been removed. Now that the assignment order has been promulgated in Dharmapuri District, and as the Government has promised to give pattas to these people, will they come forward to give pattas to these people who have been cultivating on these poromboke lands?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

சென்னையிலுள்ள வட்டிக் கடைக்காரர்கள்.

*வினா எண் 580— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள வட்டிக் கடைக்காரர்கள் தமிழிலோ, ஆங்கிலத்திலோ அல்லாமல் இந்தியில் கணக்கு எழுதுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் தமிழில் அல்லது ஆங்கிலத்தில்தான் கணக்கு எழுத வேண்டும் என்று அவர்களை அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) சென்னையிலுள்ள அடகுக் கடைக்காரர்கள் அனைவரும் பொதுவாக எல்லாக் கணக்குகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலும்தான் எழுது கிறார்கள்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையிலே சில வட்டிக்கடைக்காரர்கள், வடமொழியிலேயே கணக்கு எழுதுவதாகத் தெரிகிறது. தமிழ் தெரிந்தவர் தான் வட்டிக் கடைகளில், கணக்குப்பிள்ளையாக இருந்தாலும்கூட, வட மொழியில் எழுதுகிற நடைமுறை இருந்து கொண்டிருக்கிறது. உதாரணம் வேண்டுமானாலும் என்னால் கொடுக்க முடியும். ஆகவே, எல்லோரும் தமிழில்தான் எழுத வேண்டும். அப்போதுதான் அரசு அதிகாரிகள் கணக்கை சரி பார்க்க முடியும் என்ற வகையில் ஒரு கண்டிப்பான உத்தரவை இடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1944 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்ினுடைய 10 (1), 10 (2) ஆவது பிரிவின்படி ஸ்தல மொழியில்தான், அந்தக் கணக்குகளை எழுத வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்தல மொழியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் சில இடங்களில் மலையாளத்திலும், சென்னையை சுற்றியிருக்கிற வட ஆற்காடு மாவட்டத்தில் பொன்னேரி, அரக்கோணம் போன்ற சில இடங்களில் தெலுங்கிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் சில இடங்களில், ஆம்பூர் திருப்பத்தூர், வாணியம்பாடி நகராட்சிகளில் உருதுவிலும், சேலம் மாவட்டத்தில் ஓசூர் மற்றும் உதகை மண்டல நகராட்சிகளில் கன்னடத்திலும், அவைகள் ஸ்தல மொழியாக இருக்கிற காரணத்தினால் எழுதலாம் என்றும் 1944 ஆம் ஆண்டு அடகு கடைக்காரர்கள் சட்ட விதி 10-ன் கீழ் கொண்டு வந்து உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மற்ற பகுதி களில் தமிழில்தான் எழுத வேண்டும். காரணம் தமிழ்தான் ஸ்தல மொழியாக இருக்கிறது. அதை மாற்றி யாராவது எழுது வார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் சுட்டிக் காட்டுவார்களேயானால், அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 1]

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வட்டிக் கடைக்காரர்கள் தமிழகத்தில் 15 ஆயிரத்திற்கும் அதிகமான வட்டிக் கடைகளை வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கணக்குகளை ஆங்கிலத்திலே எழுதினாலும் கூட அந்தத் தொகைக்கு அதிக வட்டி போட்டு பொது மக்களிடமிருந்து வாங்குவது மட்டுமல்லாமல், முதலில் பெறுகின்ற வட்டியை கணக்கில் காட்டுவதே கிடையாது. ஆகவே இப்படி அவர்கள் ஏழை மக்களை சுரண்டுவதை தடுக்க, இந்த வட்டிக் கடைகளை நடத்துவதை தடை செய்துவிட்டு, கூட்டுறவுத்துறை மூலம் சாதாரண ஏழை எளியவர்களுக்குத் தேவைப்படும் சிறு சிறு கடன்களை, குறைந்தவட்டியில் கொடுத்து உதவும் படியான ஒரு நடவடிக்கையை இந்த அரசு ஏற்று நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தனியார் வட்டிக் கடைகளை முழுமையாக தடை செய்கிறபோது எந்த அளவிற்கு ஏழை எளிய மக்கள் வாழ்க்கையில் பல கட்டங்களில் சிக்கல் ஏற்படுகிறது என்பதை கடந்த காலத்தில் அறிந்தோம். ஆனால் தனியார் வட்டிக் கடைக்காரர்கள் ஏழைகளிடம் சுரண்டுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் தொடர்ந்து எடுக்கப்படும். அதோடு கூட்டுறவுத் துறையின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி, அந்த அமைப்புகளின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு குறைந்த வட்டியில் அதிக கடன் கொடுக்கக் கூடிய ஒரு நல்ல நடவடிக்கைகளை கடந்த 3 ஆண்டு காலமாக அரசு எடுத்து வருகிறது. நடப்பு ஆண்டிலேயும் அதை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள விருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் தங்கள் சொத்துக்களை அடகுக் கடைகளில் அடைமானம் வைக்கிறபோது, அவர்கள் அடித்துக் கொடுக்கிற அந்த ரசீதில் ஆங்கிலத்தில் தான் எழுதப்பட்டிருக்கிறது. அதனால் அந்த மக்கள் அதை படித்துப் புரிநதுக்கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றனர். ஆகவே தமிழ் பேசப்படும் இந்த மாநிலத்திலாவது தமிழ் மொழியில் அந்த ரசீதுகளில் எழுத வேண்டும் என்று அரசு உத்தரவு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் எழுத வேண்டும் என்ற உத்தரவு இருக்கிறது. ஆங்கிலத்திலும் எழுதலாம் என்கிற உத்தரவு இருக்கிறது. தமிழில் மட்டுமே எழுத வேண்டும் என்ற உத்தரவு இல்லாத காரணத்தினால், அதைப் பயன்படுத்திக் கொண்டு ரசீதுகளில் ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். அது குறித்து அரசு பரிசீலிக்கும்.